**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேலூர்**

**முன்னிலை: திரு.என். சுரேஷ். பி.ஏ.பி.எல்.,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி, மேலூர்.**

**2017ம் ஆண்டு நவம்பர் திங்கள் 10ம் நாள் வெள்ளிக்கிழமை**

**அசல் வழக்கு எண்.238/2009**

--------

1. டி.சந்திரசேகர்
2. டி.கௌரி சங்கர்

..வாதிகள்

/எதிரிடை/

1. முருகேசன்
2. தனுகொடி * (died)
3. லலிதா *
4. சர்மிளா *

..பிரதிவாதிகள்

*(Defendant No.2 expired during the pendency of suit and the defendants No.3 & 4 are impleaded as LRs of defendant No.2 as per the order in I.A.No.369/2013 dated 20.09.2013 and the plaint was amended as per the order in I.A.No.415/2014 dated 21.08.2014)

இவ்வழக்கானது எனது முன்பாக கடந்த 17.04.2017 அன்று இறுதி விசாரணைக்கு வந்த போது வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திருவாளர் எஸ்.எம்.பி.அமலன் அவர்கள் ஆஜராகியும், 1ம் பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திருவாளர் வி.சுப்பிரமணியம் அவர்கள் ஆஜராகியும், 2ம் பிரதிவாதி அசல் வழக்கு நிலுவையில் இருக்கும் போதே இறந்தும், 3 மற்றும் 4ம் பிரதிவாதிகள் அழைத்தும் ஆஜராகாததால் தோன்றாத் தரப்பினர் ஆக்கப்பட்டும், இருதரப்பு தரப்பு வாதுரைகளைக் கேட்டும், வழக்காவணங்களைப் பரிசீலனை செய்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்றத்தில் பரிசீலனையில் இருந்து வந்ததுமான இவ்வழக்கில் இன்று இந்நீதிமன்றம் வழங்கிடலான

**<u>தீர்ப்புரை</u>**

இவ்வழக்கானது தாவா 1வது இலக்கச் சொத்தானது வாதிகளுக்கு கூட்டாக பாத்தியப்பட்டது என்று விளம்புகை செய்தும், அதன் தொடர்ச்சியாக தாவா 1வது இலக்கச் சொத்தில் வாதிகளின் அமைதியான அனுபவத்தையும், சுவாதீனத்தையும் பிரதிவாதிகளோ, அவர்களது ஆட்களோ, முகவர்களோ மற்றும் அவர்களது உரிமை பெற்ற நபர்களோ எந்தவிதத்திலும் இடையூறு செய்யக்கூடாது என்று பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்

கட்டளைப் பரிகாரம் பிறப்பிக்கக் கோரியும், மேலும் தாவா 2 முதல் 4 இலக்கச் சொத்துக்களை நயமிடர் பார்த்து பிரித்து, மூன்றில் இரண்டு பாகத்தை இந்த வாதிகளுக்கு ஒதுக்குமாறு பிரதிவாதிகளுக்கு உத்தரவிடக் கோரியும், மேலும் வாதிகளின் பாகம் ஒப்படைக்கப்படும் தேதி வரை 2 முதல் 4 இலக்கச் சொத்துக்களிலிருந்து கிடைக்கக்கூடிய எதிர்கால நஷ்டியை உரிமையியல் விசாரணை முறைச் சட்டம் கட்டளை 20 விதி 2ன்படி பிரதிவாதியிடமிருந்து வசூலித்துக் கொள்ள வாதிகளுக்கு அனுமதி வழங்கக் கோரியும், மேலும் இவ்வழக்கின் செலவுத் தொகையினை பிரதிவாதிகள் வாதிகளுக்குச் செலுத்துமாறு உத்தரவிடக் கோரியும் மற்றும் இந்நீதிமன்றம் உசிதமெனக் கருதும் இதர பரிகாரங்களுக்காகவும் உரிமையியல் விசாரணை முறைச் சட்டம் 1908 கட்டளை 7 விதி 1ன் கீழ் வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

## 2. திருத்தப்பட்ட வழக்குரையின் சுருக்கம்

2ம் பிரதிவாதியானவர் இந்த வாதிகளின் தகப்பனார் ஆவார். தாவா 1வது இலக்கச் சொத்தானது இந்த வாதிகள் மைனர்களாக இருந்த போது, 2ம் பிரதிவாதியை காப்பாளராகக் கொண்டு, வாதிகளின் பெயர்களில், இந்த வாதிகளுக்கு உறவினர்கள் கொடுத்த அன்பளிப்புத் தொகையினைக் கொண்டு, கடந்த 08.07.1981ம் தேதியில் கிரையம் பெறப்பட்டுள்ளது. தாவா 2 முதல் 4 இலக்கச் சொத்துக்கள் இந்த வாதிகளின் பூர்வீகச் சொத்துக்கள் ஆகும். தாவாச் சொத்துக்கள் ஆதியில் முத்து என்ற பெரியணன் செட்டியாருக்குப் பாத்தியப்பட்டிருந்தன. அவருக்கு மூன்று மனைவிகள் ஆவார்கள். மேற்படி முத்து என்ற பெரியணன் செட்டியார் உயிரோடு இருந்த போதே அவருக்குப் பாத்தியப்பட்டிருந்த சொத்துக்களைப் பொறுத்து, கடந்த 13.08.1956ம் தேதியில் ஒரு பதிவு பெற்ற பாகம் ஏற்படுத்தப்பட்டிருந்தது. முத்து என்ற பெரியணன் செட்டியாரின் இறப்பிற்குப் பின்னர் அவரது 3வது மனைவி லட்சுமி ஆச்சி தாவா 1வது இலக்கச் சொத்தை அடைந்து அனுபவம் செய்து வந்ததை, இந்த வாதிகள், அவர்களது தகப்பனாரான 2ம் பிரதிவாதியை காப்பாளராகக் கொண்டு கிரையம் பெற்றுள்ளனர். இந்த வாதிகள் மேஜரானதும், தாவா 1வது இலக்கச் சொத்தின் சுவாதீனத்தை அடைந்து அனுபவம் செய்து வருகிறார்கள். 2 முதல் 4 இலக்கச் சொத்துக்கள் பாகப்பிரிவினையின் போது 2ம் பிரதிவாதிக்குக் கிடைக்கப் பெற்றது. குடும்பத்திற்குள் பாகம் எதுவும் ஏற்படவில்லை என்பதால், மேற்படி 2 முதல் 4 இலக்கச் சொத்துக்களில் இந்த வாதிகளுக்கு மூன்றில் இரண்டு பாகம் பாத்தியப்பட்டுள்ளது. மேற்படி உண்மைகளை மறைத்து இந்த வாதிகளின் தகப்பனாரான 2ம் பிரதிவாதியானவர்

தாவாச் சொத்துக்களின் முழு உரிமையாளர் போல் கடந்த 27.10.1999ம் தேதியில் 1ம் பிரதிவாதிக்கு விற்பனை செய்து கொடுத்துள்ளார். அவ்வாறு கிரையம் கொடுப்பதற்கு 2ம் பிரதிவாதிக்கு எந்தவிதமான உரிமையும் இல்லை. எனவே 2ம் பிரதிவாதியால் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ள மேற்படி கிரையமானது சட்டப்படி செல்லத்தக்கதல்ல. அவை இந்த வாதியையும் கட்டுப்படுத்தாது. எனவே 1ம் பிரதிவாதிக்கு கடந்த 12.02.2009ம் தேதியில் ஒரு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பப்பட்டது. அதற்கு பொய்யான காரணங்களுடன் 1ம் பிரதிவாதி கடந்த 19.02.2009ம் தேதியில் ஒரு பதில் அறிவிப்பு அனுப்பியுள்ளார். எனவே, தாவா 1வது இலக்கச் சொத்தானது வாதிகளுக்கு கூட்டாக பாத்தியப்பட்டது என்று விளம்புகை செய்தும், அதன் தொடர்ச்சியாக தாவா 1வது இலக்கச் சொத்தில் வாதிகளின் அமைதியான அனுபவத்தையும், சுவாதீனத்தையும் பிரதிவாதிகளோ, அவர்களது ஆட்களோ, முகவர்களோ மற்றும் அவர்களது உரிமை பெற்ற நபர்களோ எந்தவிதத்திலும் இடையூறு செய்யக்கூடாது என்று பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்துக் கட்டளைப் பரிகாரம் பிறப்பிக்கக் கோரியும், மேலும் தாவா 2 முதல் 4 இலக்கச் சொத்துக்களை நயமிடர் பார்த்து பிரித்து, மூன்றில் இரண்டு பாகத்தை இந்த வாதிகளுக்கு ஒதுக்குமாறு பிரதிவாதிகளுக்கு உத்தரவிடக் கோரியும், மேலும் வாதிகளின் பாகம் ஒப்படைக்கப்படும் தேதி வரை 2 முதல் 4 இலக்கச் சொத்துக்களிலிருந்து கிடைக்கக்கூடிய எதிர்கால நஷ்டியை உரிமையியல் விசாரணை முறைச் சட்டம் கட்டளை 20 விதி 2ன்படி பிரதிவாதியிடமிருந்து வசூலித்துக் கொள்ள வாதிகளுக்கு அனுமதி வழங்கக் கோரியும், இந்த அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. **<u>1ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர் வழக்குரையின் சுருக்கம்</u>**

தாவா பிராது சட்டப்படிக்கோ சங்கதிகள் படிக்கோ செல்லத்தக்கதல்ல. தாவா வழக்கில் சொத்து ஜாப்தாவில் சொத்து விபரங்கள் சரியாக துலக்கப்படவில்லை. பிராது சொத்துக்களுக்கு தவறான நான்குமால்கள் கொடுக்கப்பட்டுள்ளன. அவைகளின் உட்பிரிவு எண்கள் குறிப்பிடப்படவில்லை. வாதிகள் 2ம் பிரதிவாதியின் ஆண்மக்கள் என்பதும், வாதிகளும் 2ம் பிரதிவாதியும் இந்து பிரிவினையாகாத கூட்டுக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் என்பது மட்டும் ஒப்புக்கொள்ளப்படுகிறது. தாவா 1வது இலக்கச் சொத்து வாதிகளுக்கு தனித்து பாத்தியப்பட்ட கிரய சொத்து என்பதும், வாதிகளுக்கு அவர்களின் உறவினர்களும் நண்பர்களும் நன்கொடையாக பணம் கொடுத்ததாக கூறுவதும் அவைகளைக் கொண்டு தாவா 1வது லக்க சொத்து வாதிகளால் அவர்களின் காப்பாளரும் தகப்பனாருமான

2ம் பிரதிவாதி மூலம் 08.07.1981ல் கிரயம் வாங்கப்பட்டதாக கூறுவதும் மறுக்கப்படுகிறது. கூட்டுக்குடும்ப வருமானத்திலிருந்து, கூட்டுக் குடும்பத்திற்காக வாதிகளின் பெயர்களில் வாங்கப்பட்டுள்ளது. 13.08.1956-ம் தேதியிட்ட பாகப்பத்திரத்தை வாதிகள் தாக்கல் செய்யவில்லை. அதிலிருந்துதான பாக சம்பந்தமாக விபரங்களை புரிந்து கொள்ள முடியும். தாவாச் சொத்துக்கள் 2-ம் பிரதிவாதியின் தனிப்பட்ட சொத்துக்களாக இருந்து பின்னால் அவரால் கிரயம் செய்யப்பட்டுவிட்டன. 1-ம் பிரதிவாதி பெற்றுள்ள கிரயங்கள் உண்மையானவை, பிரதிபிரயோஜனம் உள்ளவை. சட்டப்படி செல்லக் கூடியவையாகும். இந்த 1ம் பிரதிவாதிக்கு, 2-ம் பிரதிவாதி கடந்த 27.10.1999ம் தேதி உள்ள கிரய தஸ்தாவேசு மூலம் தும்பைப்பட்டி கிராமம் சர்வே நம்பர் 246-ல் கட்டுப்பட்ட 60 செண்டை அதற்குள்ள நான்கு மால்களை காட்டியும் மேற்படி சர்வேயில் 50 செண்டை அதற்குள்ள நான்கு மால்களை காட்டியும் மேற்படி சர்வேயில் 45 செண்டை அதற்குள்ள நான்கு மால்களை காட்டியும் இந்த 1ம் பிரதிவாதிக்கு சரியான பிரதிபிரயோசனத்திற்கு கிரயம் செய்து கொடுத்து அவைகளின் சுவாதீனத்தையும் கிரய தேதியில் இந்த பிரதிவாதியிடம் ஒப்படைத்துவிட்டார். அதன்பின் 2-ம் பிரதிவாதி மேற்படி 27.10.1999-ம் தேதி கிரயப் பத்திரத்தில் கட்டுப்பட்ட சர்வே நம்பர் 246-ல் ஏக்கர் 1 செண்டு 55-ல் வரப்பில் இருந்த தென்னை மரங்களை சரியான பிரதிபிரயோஜனத்திற்கு இந்த பிரதிவாதிக்கு 14.02.2002-ம் தேதியுள்ள ரிஜிஸ்டர் கிரய தஸ்தாவேசு மூலம் சரியான பிரதிபிரயோஜனத்திற்கு கிரயம் செய்து கொடுத்து விட்டார். மேலும் 2ம் பிரதிவாதியின் மனைவி லலிதா என்பவர் 02.06.2003ம் தேதியிட்ட பதிவு பெற்ற கிரைய ஆவணம் மூலம் அவருக்கு கிரய பாத்தியப்பட்ட சர்வே எண்.246-ல் செண்டு 50 அதற்குள்ள நான்குமால்களை காண்பித்து சரியான பிரதிபிரயோஜனத்திற்கு கிரயம் செய்து கொடுத்து அதன் சுவாதீனத்தையும் இந்த பிரதிவாதியிடம் கிரய தேதியில் ஒப்புவித்து விட்டார். மேலும் 2ம் பிரதிவாதி கடந்த 14.12.2002ல் சர்வே நம்பர் 246-ல் கட்டுப்பட்ட செண்டு 24-ஐ அதற்கு உள்ள நான்கு மால்களுடன் சரியான பிரதிபிரயோஜனத்திற்கு கிரயம் செய்து கொடுத்து அதன் சுவாதீனத்தையும் கிரய தேதியில் 1ம் பிரதிவாதியிடம் ஒப்படைத்துவிட்டார். மேற்படி கிரய தஸ்தாவேசுகள்படி 1ம் பிரதிவாதிக்கு சர்வே நம்பர் 246-ல் ஏக்கர் 2 செண்டு 29ம் பாத்தியப்பட்டு அது அவருடைய சட்ட ரீதியான சுவாதீனத்திலும் இருந்து வருகிறது. அதை இந்த பிரதிவாதி உட்பிரிவு செய்து கொண்டு தனியாக பட்டாவும் பெற்றுள்ளார். சர்வே நம்பர் 246-ல் கட்டுப்பட்ட இடங்களை 2-ம் பிரதிவாதி பல நபருக்கு கிரயம் செய்து கொடுத்துள்ளார். அவர்களை வாதிகள் வேண்டுமென்றே தாவா வழக்கில் கட்சிக்காரர்களாக

சேர்க்காததிலிருந்தே வாதிகளின் மோசடி புரியும். இந்த பிரதிவாதிக்கு 2-ம் பிரதிவாதி எழுதிக் கொடுத்துள்ள கிரயப் பத்திரங்களில் கண்ட சொத்துக்கள் ஒத்துக்கொள்ளாத வகையில் விவகாரத்திற்காக பொதுக்குடும்ப சொத்துக்கள் என்று வைத்துக்கொண்டாலும் குடும்ப மானேஜர் என்ற உரிமையிலும், குடும்ப தலைவர் மற்றும் கர்த்தா, தகப்பனார் என்ற முறையில் பொதுக்குடும்ப நன்மைக்காகவும், பொதுக் குடும்ப செலவிற்கும், பொதுக்குடும்ப சில்லரைக் கடன்களைத் தீர்ப்பதற்கும் மேற்படி கிரயங்களை செய்து கொடுப்பதற்கு 2ம் பிரதிவாதிக்கு முழு உரிமை உள்ளது. மேற்படி கிரயங்கள் செய்த காலங்களிலேயே வாதிகளுக்கு மேற்படி கிரயங்கள் தெரிந்தும், அவற்றை அவர்கள் ஆட்சேபிக்கவில்லை. எல்லாப் பொதுக்குடும்ப சொத்துக்களையும் தாவா வழக்கில் சேர்க்காமல் தாவா சொத்துக்களில் மட்டும் பாகம் கேட்டு தாக்கல் செய்துள்ள தாவா வழக்கு செல்லத்தக்கதில்லை. தாவா சர்வேயில் கிரயம் பெற்ற இதர நபர்களை தாவா வழக்கில் கட்சிக்காரர்களாக சேர்க்காத தோஷத்திற்கு தாவா பிராது உட்பட்டுள்ளது. தாவா வழக்கில் இதர பங்குதாரர்களை சேர்க்காத தோஷத்திற்கு தாவா பிராது உட்பட்டுள்ளது. இந்தப்பிரதிவாதி பெற்றக் கிரயங்களை ரத்து செய்ய பரிகாரம் கோராமலும் அதற்கு நீதிமன்றக் கட்டணம் கட்டாமலும் செய்துள்ள வழக்கு சட்டப்படி செல்லத்தக்கதல்ல. எனவே இந்த அசல் வழக்கானது இந்த பிரதிவாதியின் செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டும்.

4. 2ம் பிரதிவாதி அசல் வழக்கு நிலுவையில் இருக்கும் போதே இறந்து விட்டார். 3 மற்றும் 4 பிரதிவாதிகள் அழைத்தும் ஆஜராகாததால் தோன்றாத் தரப்பினர் ஆக்கப்பட்டுள்ளனர்.

5. வாதிகளின் வழக்குரை மற்றும் பிரதிவாதியின் எதிர்வழக்குரை ஆகியவற்றின் அடிப்படையில் கீழ்க்கண்ட எழுவினாக்கள் வனையப்பட்டன.

6. **<u>எழுவினாக்கள்:</u>**

1. Whether the plaintiff is entitled to declaration consequently Permanent Injunction against defendant in respect of 1$^{st}$ item of the suit schedule properties?
2. Whether the plaintiffs are entitled to 2/3 share in the 2 to 4 items of the suit schedule properties?
3. Whether the plaintiffs entitled to future profits in respect of 2 to 4 items of suit schedule properties?
4. Whether the 1$^{st}$ defendant is bonafide purchaser for value as claimed by him in the Written statement?

5. Whether the suit is bad for non joinder of necessary parties?
6. Whether the suit is bad for non joinder of Co-Sharers as claimed by the 1st defendant?
7. Whether the suit is not value for the purpose of court fees?

7. இவ்வழக்கில் வாதிகள் தரப்பில் 2ம் வாதியானவர் வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.6 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

8. 1ம் பிரதிவாதி தரப்பில் 1ம் பிரதிவாதியானவர் பி.வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, பி.வா.சா.ஆ.1 முதல் பி.வா.சா.ஆ.21 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

9. **<u>எழுவினா 1</u>**

இருதரப்பு வாதுரை கேட்கப்பட்டது.

வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் வாதிடுகையில், தாவாச் சொத்துக்கள் ஆதியில் முத்து என்ற பெரியணன் செட்டியாருக்குப் பாத்தியப்பட்டிருந்தன என்றும், அவருக்கு மூன்று மனைவிகள் என்றும், மேற்படி முத்து என்ற பெரியணன் செட்டியார் உயிரோடு இருந்த போதே அவருக்குப் பாத்தியப்பட்டிருந்த சொத்துக்களைப் பொறுத்து, கடந்த 13.08.1956ம் தேதியில் ஒரு பதிவு பெற்ற பாகம் ஏற்படுத்தப்பட்டிருந்தது என்றும், முத்து என்ற பெரியணன் செட்டியாரின் இறப்பிற்குப் பின்னர் அவரது 3வது மனைவி லட்சுமி ஆச்சி தாவா 1வது இலக்கச் சொத்தை அடைந்து அனுபவம் செய்து வந்ததுள்ளார் என்றும், லட்சுமி ஆச்சி பெயரிலான கணிணி பட்டா வா.சா.ஆ.2 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், தாவா 1வது இலக்கச் சொத்தை இந்த வாதிகள், அவர்களது தகப்பனாரான 2ம் பிரதிவாதியை காப்பாளராகக் கொண்டு கடந்த 08.07.1981ம் தேதியில் கிரையம் பெறப்பட்டுள்ளனர் என்றும், மேற்படி கிரைய ஆவணம் அசல் வா.சா.ஆ.1 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், இந்த வாதிகள் மேஜரானதும், தாவா 1வது இலக்கச் சொத்தின் சுவாதீனத்தை அடைந்து அனுபவம் செய்து வருகிறார்கள் என்றும், இந்த வாதிகள் பெயர்களில் 1411ம் பசலிக்கு பட்டா எண்.250க்குச் செலுத்தப்பட்ட கிஸ்தி ரசீது வா.சா.ஆ.3 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும் வாதிடப்பட்டது.

10. வாதிகள் தரப்பில் மேலும் வாதிடுகையில், தாவா 2 முதல் 4 இலக்கச் சொத்துக்கள் இந்த வாதிகளின் பூர்வீகச் சொத்துக்கள் என்றும், 2 முதல் 4 இலக்கச் சொத்துக்கள் பாகப்பிரிவினையின் போது 2ம் பிரதிவாதிக்குக் கிடைக்கப் பெற்றது என்றும்,

குடும்பத்திற்குள் பாகம் எதுவும் ஏற்படவில்லை என்பதால் மேற்படி 2 முதல் 4 இலக்கச் சொத்துக்களில் இந்த வாதிகளுக்கு மூன்றில் இரண்டு பாகம் பாத்தியப்பட்டுள்ளது என்றும், மேற்படி உண்மைகளை மறைத்து இந்த வாதிகளின் தகப்பனாரான 2ம் பிரதிவாதியானவர் தாவாச் சொத்துக்களின் முழு உரிமையாளர் போல் கடந்த 27.10.1999ம் தேதியில் 1ம் பிரதிவாதிக்கு விற்பனை செய்து கொடுத்துள்ளார் என்றும், மேற்படி கிரய ஆவணம் பிரதிவாதிகள் தரப்பில் பி.வா.சா.ஆ.3 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், அவ்வாறு கிரையம் கொடுப்பதற்கு 2ம் பிரதிவாதிக்கு எந்தவிதமான உரிமையும் இல்லை என்றும் வாதிடப்பட்டது.

11. வாதிகள் தரப்பில் மேலும் வாதிடுகையில், 2ம் பிரதிவாதியால் ஏற்டுபடுத்திக் கொடுக்கப்பட்டுள்ள பி.வா.சா.ஆ.3ன்படியான கிரயமானது இந்த வாதிகளை கட்டுப்படுத்தாது என்று தெரிவித்து, 1ம் பிரதிவாதிக்கு கடந்த 12.02.2009ம் தேதியில் ஒரு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பப்பட்டது என்றும், மேற்படி வழக்கறிஞர் அறிவிப்பின் அலுவலக நகல் வா.சா.ஆ.4 ஆகவும், அதனை 1ம் பிரதிவாதி பெற்றுக் கொண்டதற்கான அஞ்சல் ஒப்புகை அட்டை அசல் வா.சா.ஆ.5 ஆகவும், அதற்கு பொய்யான காரணங்களுடன் 1ம் பிரதிவாதி கடந்த 19.02.2009ம் தேதியில் ஒரு பதில் அறிவிப்பு அனுப்பியுள்ளார் என்றும், மேற்படி பதில் அறிவிப்பு வா.சா.ஆ.6 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், அதனைத் தொடர்ந்து இந்த அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும் வாதிடப்பட்டது.

12. வாதிகள் தரப்பில் மேலும் வாதிடுகையில், மைனர்கள் பெயர்களில் உள்ள சொத்துக்களை, மைனர்களின் நலனுக்காக அவர்களின் காப்பாளர்கள் கிரையம் செய்து கொடுக்க வேண்டுமானால் நீதிமன்றத்தில் உரிய மனுக்கள் தாக்கல் செய்து அனுமதி பெற்ற பின்னரே கிரையம் செய்து கொடுக்க முடியும் என்று முன் மாதிரி வழக்குகளில் வழிகாட்டுதல்கள் வழங்கப்பட்டுள்ளன என்றும் அசல் வழக்கின் வழக்குரையிலிருந்தும் பி.வா.சா.1ன் சாட்சியத்திலிருந்தும் பி.வா.சா.ஆ.3 ஆவணம் ஏற்பட்ட காலத்தில் இந்த வாதிகள் மேஜர்கள் என்பது தெரிய வருகிறது என்றும், எனவே தாவாச் சொத்தின் உரிமையாளர்களான இந்த வாதிகளிடமிருந்து பெறப்படாத பி.வா.சா.ஆ.3ன்படியான கிரயமானது இந்த வாதிகளை கட்டுப்படுத்தாது என்றும், மேலும் தாவாச் சொத்துக்கள் பொதுக்குடும்ப வருமானத்திலிருந்து பொதுக்குடும்ப நலனுக்காக கிரயம் பெறப்படுவதாக வா.சா.ஆ.1 ஆவணத்தில் எந்தவிதமான குறிப்புகளும் இடம் பெறவில்லை என்றும், மேலும் பி.வா.சா.ஆ.6ன்படியான கிரைய ஆவணத்தின் மூலம் வா.சா.ஆ.1ன்படியான வாதிகள் பெயர்களில் ஏற்பட்டுள்ள கிரையத்தை

1ம் பிரதிவாதியும் ஏற்றுக் கொண்டு, தாவா 1வது இலக்கச் சொத்தை மட்டும் பொதுக்குடும்பச் சொத்து என்று முன்னுக்குப் பின் முரணாக வாதுரை மேற்கொள்கிறார் என்றும், மேலும் தாவா 1வது இலக்கச் சொத்து வாதிகளின் பெயர்களில் இருப்பதை தெரிந்து கொண்டே, கிரைய காலத்தில் மேஜராக இருந்த வாதிகளிடம் இருந்து கிரயம் பெறாமல் 2ம் பிரதிவாதியிடம் இருந்து, 1ம் பிரதிவாதி கிரையம் பெற்றுள்ளார் என்றும், எனவே தாவா 1வது இலக்கச் சொத்தானது இந்த வாதிகளுக்குக் கூட்டாக பாத்தியப்பட்டது என்று விளம்புகை செய்தும், அதனைத் தொடர்ந்து நிரந்தர உறுத்துக் கட்டளைப் பரிகாரமும் வழங்கி தீர்ப்பும், தீர்ப்பாணையும் பிறப்பிக்க வேண்டும் என்றும் வாதிடப்பட்டது.

13. 1ம் பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் வாதிடுகையில், வாதிகளும், 2 முதல் 4 பிரதிவாதிகளும் இந்து பொதுக்குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் என்றும், மேற்படி பொதுக்குடும்பத்தில் பாகம் எதுவும் நடைபெறவில்லை என்றும், 2ம் பிரதிவாதி உயிருடன் இருக்கும் வரை அவரே பொதுக்குடும்பத் தலைவராகவும், கர்த்தாவாகவும் இருந்து பொதுக்குடும்பச் சொத்துக்களை நிர்வாகம் செய்து வந்துள்ளார் என்றும், 2ம் பிரதிவாதியின் தகப்பனாரான முத்து என்ற பெரியணன் செட்டியார் கடந்த 07.04.1956ம் தேதியில் பதிவு பெற்ற பாகப்பத்திரத்தின்படி சி செட்யூல் சொத்துக்களை 2ம் பிரதிவாதிக்கு அவருடைய தாயாரான லெட்சுமி ஆச்சியை கார்டியனாக நியமனம் செய்து, பாத்தியப்படுத்தியுள்ளார் என்றும, மேற்படி தான செட்டில்மெண்ட் பத்திரத்தின் சான்றிட்ட நகல் பி.வா.சா.ஆ.1 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும் வாதிடப்பட்டது.

14. 1ம் பிரதிவாதி தரப்பில் மேலும் வாதிடுகையில், 2ம் பிரதிவாதியின் தகப்பனாருக்கும், அப்போது மைனராக இருந்த 2ம் பிரதிவாதி மற்றும் அவருடைய சகோதர, சகோதரிகளுக்கும் கடந்த 13.08.1956ம் தேதியிட்ட பாகத்தின் போது சி செட்யுலில் கண்ட சொத்துக்கள் 2ம் பிரதிவாதிக்கு ஒதுக்கப்பட்டு, 2ம் பிரதிவாதி அப்போது மைனராக இருந்ததால், அவரது தாயாரான லெட்சுமி ஆச்சி காப்பாளாராக நிர்வாகம் செய்து வந்துள்ளார் என்றும், மேற்படி 13.08.1956ம் தேதியிட்ட பாகப் பத்திரத்தின் சான்றிட்ட நகல் பி.வா.சா.ஆ.2 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், மேற்படி சொத்துக்களின் வருமானத்திலிருந்து 1வது இலக்கச் சொத்து வாதிகள் பெயரிலும், வேறு சில சொத்துக்கள் 2ம் பிரதிவாதி பெயரிலும் கிரையம் வாங்கப்பட்டு பொதுக்குடும்பச் சொத்தாக அனுபவம் செய்யப்பட்டு வந்துள்ளது என்றும், மேற்கண்டவாறு வா.சா.ஆ.1ன்படியான கிரையம் வாதிகள் பெயர்களில் வாங்கப்பட்டாலும் அவை பொதுக்குடும்ப வருமானத்திலிருந்தே கிரையம் பெறப்பட்டுள்ளன

என்றும், வா.சா.ஆ.1ன்படியான கிரைய காலத்தில் வாதிகளுக்கு தனித்த வருமானம் எதுவும் இல்லை என்றும், வாதிகளுக்கு எந்த உறவினரும், சிநேகிதரும் வெகுமதியாக பணம் கொடுக்கவில்லை என்றும், எனவே வா.சா.ஆ.1ன்படியான கிரையச் சொத்துக்கள் வாதிகளுக்குத் தனித்துப் பாத்தியப்பட்டவை இல்லை என்றும் வாதிடப்பட்டது.

15. 1ம் பிரதிவாதி தரப்பில் மேலும் வாதிடுகையில், 2ம் பிரதிவாதியானவர் பொதுக்குடும்பத்தின் தகப்பனார் மற்றும் கர்த்தா என்ற முறையில் தாவா 1 மற்றும் 2வது இலக்கச் சொத்துக்களை கடந்த 27.10.1999ம் தேதியிட்ட கிரைய ஆவணப்படி கிரயம் கொடுத்து, மேற்படி சொத்துக்களின் சுவாதீனத்தையும் ஒப்படைத்து விட்டார் என்றும், 27.10.1999ம் தேதியிட்ட கிரைய ஆவணம் அசல் பி.வா.சா.ஆ.3 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், வா.சா.ஆ.1ல் கட்டுப்பட்ட செண்டு ஐந்தையும், அதில் உள்ள கிணற்றுக்கும், வாய்க்காலுக்கும் உள்ள இடத்தையும் வாதிகளிடமிருந்தும் 2ம் பிரதிவாதியிடமிருந்தும் கடந்த 10.02.2003ம் தேதியில் கிரையம் கொடுத்துள்ளார் என்றும், மேற்படி கிரைய ஆவணம் அசல் பி.வா.சா.ஆ.6 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும் வாதிடப்பட்டது.

16. 1ம் பிரதிவாதி தரப்பில் மேலும் வாதிடுகையில், மேற்படி கிரையச் சொத்துக்களுக்கு ஆரம்பத்தில் இந்த 1ம் பிரதிவாதியின் பெயரில் கூட்டுப்பட்டா ஏற்பட்டிருந்தது என்றும் மேற்படி கூட்டுப்பட்டா ஏற்பட்டதற்கான பட்டா மாறுதல் உத்தரவு பி.வா.சா.ஆ.7 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், பின்னர் அவை தனியாக உட்பிரிவு செய்யப்பட்டு, பட்டா எண்.2523ன்படி தனிப்பட்டா வழங்கப்பட்டது என்றும், பட்டா எண்.2523க்கான தனிப்பட்டா பி.வா.சா.ஆ.8 ஆகவும், பட்டா பாஸ் புத்தகம் அசல் பி.வா.சா.ஆ.9 ஆகவும், கிஸ்தி ரசீதுகள் பி.வா.சா.ஆ.10 முதல் 21 வரையிலும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், தாவா 4வது இலக்கச் சொத்தானது 2ம் பிரதிவாதியால் கிரையம் பெறப்பட்டு, அவருடைய அனுபவத்தில் இருந்து வருகிறது என்றும், அவர் இந்த அசல் வழக்கில் தரப்பினராக சேர்க்காத தோஷத்திற்கு இந்த அசல் வழக்கு உட்பட்டுள்ளது என்றும், தாவா வழக்கிடைச் சொத்துக்களில் வாதிகளுக்கு எந்தவிதமான பங்கு உரிமையோ, பாகமோ கிடைக்கத்தக்கதல்ல என்றும், எனவே இந்த அசல் வழக்கானது இந்த பிரதிவாதியின் செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றும் வாதிடப்பட்டது.

17. 2ம் பிரதிவாதி அசல் வழக்கு நிலுவையில் இருக்கும் போதே இறந்து விட்டார். 3 மற்றும் 4 பிரதிவாதிகள் அழைத்தும் ஆஜராகாததால் தோன்றாத் தரப்பினர்

ஆக்கப்பட்டுள்ளனர்.

18. இருதரப்பு வாதுரை மற்றும் சாட்சிய, சான்றாவணங்களிலிருந்து தாவா 1வது இலக்கச் சொத்தைப் பொறுத்து வாதிகள் கோரியுள்ள விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக் கட்டளைப் பரிகாரம் வாதிகளுக்குக் கிடைக்கத்தக்கதா என்பதைப் பரிசீலனை செய்யும் போது, தாவா 1வது இலக்கச் சொத்தானது வாதிகளின் பெயர்களில், அவர்களின் தந்தையான 2ம் பிரதிவாதியை காப்பாளராகக் கொண்டு வா.சா.ஆ.1ன்படி கிரையம் பெறப்பட்டுள்ளது என்பது 1ம் பிரதிவாதி தரப்பிலும் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

19. மேலும் மைனர்கள் பெயர்களில் உள்ள சொத்துக்களை, மைனர்களின் நலனுக்காக அவர்களின் காப்பாளர்கள் கிரையம் செய்து கொடுக்க வேண்டுமானால் நீதிமன்றத்தில் உரிய மனுக்கள் தாக்கல் செய்து அனுமதி பெற்ற பின்னரே கிரையம் செய்து கொடுக்க முடியும் என்று வாதிகள் தரப்பில் வாதிட்டு தாக்கல் செய்த முன்மாதிரி வழக்கான,

2013(2) CTC 626
IN THE HIGH COURT OF MADRAS
S.Vimala. J
S.A.No.1057 of 2001
24.1.2013

Selvam and others

...Appellants

Vs.

Mangaiyarkarasi

...Respondent

Hindu Minority and Guardianship Act, 1956 (32 of 1956), Section 8(2) - Sale of property of Minot without obtaining permission of court - Rights of Purchaser - Share of Minors in suit property sold by Mother without obtaining permission of Court - Contention of Mother that sale was made for educational purposes of Minors, untenable as educational expenses during those times were very negligible - Sale, held, effected by mother only for her personal benefit and not for benefit of Minors and thus, in contravention to Section 8 - However, on account of violation of requirement enshrined in Section 8, purchaser, who purchased property from Mother, Cannot be penalised - Mother, held, cannot unjustify enrich herself by obtaining sale consideration and subsequently assisting Minors to get sale deed set aside - In such circumstances, sale deed, though declared not binding on Plaintiff/Minors, purchaser given liberty to proceed against guardian/Mother for appropriate

relief

என்று மேற்கண்டவாறு நீதிமன்ற அனுமதியின்றி காப்பாளர்களால் மேற்கொள்ளப்படும் கிரையமானது, சொத்தின் உரிமையாளர்களை கட்டுப்படுத்தாது என்று வழிகாட்டுதல்கள் வழங்கியுள்ள நிலையில், இந்த அசல் வழக்கில் பி.வா.சா.ஆ.3ன்படியான கிரையம் ஏற்பட்ட கால கட்டத்தில் வாதிகள் மேஜர்களாக இருந்துள்ளனர் என்றும், அவ்வாறு மேஜர்களாக இருந்துள்ள இந்த வாதிகளின் அனுமதி இல்லாமல் 2ம் பிரதிவாதியால் ஏற்படுத்தப்பட்ட கிரையமானது இந்த வாதிகளைக் கட்டுப்படுத்தாது என்று வாதிகள் தரப்பில் வாதிடப்பட்டுள்ளதாலும்,

20. மேலும் அசல் வழக்கின் வழக்குரையில் வாதிகளின் வயதாக முறையே 34 மற்றும் 32 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், அதன்படி தாவா 1வது இலக்கச் சொத்தைப் பொறுத்து ஏற்பட்ட பி.வா.சா.ஆ.3ன்படியான கிரயமானது 27.10.1999ம் தேதியில் ஏற்பட்டுள்ள நிலையில், மேற்படி கிரைய தேதியில் இந்த வாதிகள் மேஜராகியுள்ளது தெரிய வருகிறது என்றும், பி.வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ள 1ம் பிரதிவாதியும் தனது குறுக்கு விசாரணையின் போது,

**"தாவா 2 மற்றும் 3வது இலக்கச் சொத்தை வாங்கும் போது வாதியும், 4ம் பிரதிவாதியும் மேஜர்தான் "**

என்று மேற்கண்டவாறு தாவாச் சொத்துக்களை கிரையம் வாங்கும் போது இந்த வாதிகளும், 2ம் பிரதிவாதியின் மற்ற வாரிசுகளும் மேஜர் என்பதை ஒத்துக் கொண்டு சாட்சியமளித்துள்ளார் என்றும், வா.சா.ஆ.1 ஆவணத்தின்படி தாவா 1வது இலக்கச் சொத்தின் உரிமையாளர்களான இந்த வாதிகள் பி.வா.சா.ஆ.3ன்படியான கிரைய தேதியில் மேஜராக இருந்துள்ள நிலையில், தாவாச் சொத்தின் உரிமையாளர்களான இந்த வாதிகளிடமிருந்து பெறப்படாத பி.வா.சா.ஆ.3ன்படியான கிரயமானது இந்த வாதிகளை கட்டுப்படுத்தாது என்று வாதிகள் தரப்பில் வாதிடப்பட்டுள்ளதாலும்,

21. மேலும் 1ம் பிரதிவாதி தரப்பில் வா.சா.ஆ.1ன்படியான கிரையம் வாதிகள் பெயர்களில் வாங்கப்பட்டாலும் அவை பொதுக்குடும்ப வருமானத்திலிருந்தே கிரையம் பெறப்பட்டுள்ளன என்றும், வா.சா.ஆ.1ன்படியான கிரைய காலத்தில் வாதிகளுக்கு தனித்த வருமானம் எதுவும் இல்லை என்றும், பி.வா.சா.ஆ.1 மற்றும் பி.வா.சா.ஆ.2 ஆவணங்களிலிருந்து 2ம் பிரதிவாதிக்கு பெரியார் பாசன பகுதில் உள்ள சொத்துக்கள் பாத்தியப்படுத்தப்பட்டு, அவற்றிலிருந்து வருமானம் கிடைத்து வந்துள்ளது தெரிய வருகிறது

என்றும், வாதிகளுக்கு எந்த உறவினரும், சிநேகிதரும் வெகுமதியாக பணம் கொடுக்கவில்லை என்றும், எனவே வா.சா.ஆ.1ன்படியான கிரையச் சொத்துக்கள் வாதிகளுக்குத் தனித்துப் பாத்தியப்பட்டவை இல்லை என்றும், அவை பொதுக்குடும்பச் சொத்துக்கள் என்று வாதிடப்பட்டுள்ள நிலையில்

22. வாதிகள் தரப்பில் அதை மறுத்து, தாவா 1வது இலக்கச் சொத்தானது வா.சா.ஆ.1 ஆவணத்தின்படி வாதிகள் பெயரில், 2ம் பிரதிவாதியை காப்பாளராகக் கொண்டு கிரையம் பெறப்பட்டுள்ளது தெரிய வரும் நிலையில், இந்த வாதிகளே தாவாச் சொத்துக்களின் தனித்த உரிமையாளர்கள் என்று தெரிய வருகிறது என்றும், மேலும் மேற்படி முன் மாதிரி வழக்கில்

**Property Law:** Property bought by Father in name of Wife and Sons, whether a Benami Transaction - No proof or allegation in instant case that property purchased by Father with intention of evading public revenue or for any illegal purpose - No veiled agenda on part of Father to purchase property in name of Wife and sons - In such circumstances, held, property bought by Father intended for benefit of Mother and Children

என்று மேற்கண்டவாறு சொத்தானது பொதுக்குடும்ப வருமானத்திலிருந்து வாங்கப்பட்டது என்பது நிரூபிக்கப்படாத நிலையில், அந்த சொத்துக்கள் குழந்தைகளின் நலனுக்காகவே வாங்கப்பட்டதாக கருதப்பட வேண்டும் என்று வழிகாட்டுதல்கள் வழங்கப்பட்டுள்ளது என்றும், அதேபோல் வா.சா.ஆ.1 கிரைய ஆவணத்திலும் பொதுக்குடும்ப வருமானத்திலிருந்து பொதுக்குடும்பத்திற்காக தாவா 1வது இலக்கச் சொத்தானது வாங்கப்படுவதாக எந்தவிதமான சங்கதிகளும் இடம் பெறாத நிலையில், தாவா 1வது இலக்கச் சொத்தானது இந்த வாதிகளின் நலனுக்காகவே வாங்கப்பட்டதாக கருதப்பட வேண்டும் என்று வாதிகள் தரப்பில் வாதிடப்பட்டது ஏற்கும்படி இருப்பதாலும்,

23. மேலும் வா.சா.ஆ.1ல் கட்டுப்பட்ட ஐந்து செண்டையும், அதில் உள்ள கிணற்றுக்கும், வாய்க்காலுக்கும் உள்ள இடத்தையும் வாதிகளிடமிருந்தும் 2ம் பிரதிவாதியிடமிருந்தும் கடந்த 10.02.2003ம் தேதியில் கிரையம் 1ம் பிரதிவாதியானவர் பி.வா.சா.ஆ.6ன்படி கிரையம் பெற்றுள்ளதாக 1ம் பிரதிவாதி தரப்பில் வாதிடப்பட்டுள்ள நிலையில்,

24. வாதிகள் தரப்பில் அதை மறுத்து, பி.வா.சா.ஆ.6ன்படியான கிரையச் சொத்துக்கள் தாவா சொத்துக்கள் இல்லை என்றும், அது வா.சா.ஆ.1 கிரைய ஆவணத்தில் உள்ள 2 மற்றும் 3வது இலக்கச் சொத்துக்கள் என்றும், பி.வா.சா.ஆ.6 ஆவணமானது இந்த அசல் வழக்கிற்கு சம்பந்தப்படாத சொத்தைப் பொறுத்து ஏற்பட்டுள்ள ஆவணம் என்றும், மேலும் வா.சா.ஆ.1 ஆவணத்தின்படியான இந்த வாதிகளின் பெயரிலான கிரையத்தை ஏற்றுக் கொள்ளும் விதமாக

வா.சா.ஆ.1ல் உள்ள மற்ற சொத்துக்களை இந்த வாதிகளிடமிருந்து பி.வா.சா.ஆ.6ன்படி கிரையம் பெற்றுள்ள 1ம் பிரதிவாதியானவர், வா.சா.ஆ.1ல் உள்ள கட்டுப்பட்டுள்ள 1வது இலக்கச் சொத்தை மட்டும் பொதுக்குடும்பச் சொத்துக்கள் என்று வாதுரை மேற்கொள்வது முன்னுக்குப்பின் முரணாக உள்ளதாக வாதிகள் தரப்பில் வாதிடப்பட்டுள்ளது ஏற்கும்படி இருப்பதாலும்,

25. மேலும் பொதுவாக ஒரு சொத்தை வாங்குவதற்கு முன்பாக வில்லங்கம் போட்டுப் பார்த்தும், வருவாய்த்துறையில் ஆவணங்களை சரிபார்த்த பின்னரும் மட்டுமே வாங்கப்படுவது வழக்கம் என்றும், பி.வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ள 1ம் பிரதிவாதியும் தனது குறுக்கு விசாரணையின் போது,

**"தாவா 1வது இலக்கச் சொத்தை கிரையம் வாங்கும் போது வில்லங்கம் பார்த்துதான் வாங்கினேன். அவ்வாறு வில்லங்கம் பார்க்கும் போது, தாவாச் சொத்து தனுஷ்கோடியின் மைனர் மகன்கள் பெயரில் இருந்தது."**

என்று மேற்கண்டவாறு தாவா 1வது இலக்கச் சொத்து வாதிகளின் பெயர்களில் இருப்பதை தெரிந்து கொண்டே, கிரைய காலத்தில் மேஜராக இருந்த வாதிகளிடம் இருந்து கிரையம் பெறாமல் 2ம் பிரதிவாதியிடம் இருந்து, 1ம் பிரதிவாதி கிரையம் பெற்றுள்ளதாக வாதிகள் தரப்பில் வாதிடப்பட்டுள்ளதாலும், எனவே,

1. தாவா 1வது இலக்கச் சொத்தானது வாதிகளின் பெயர்களில், அவர்களின் தந்தையான 2ம் பிரதிவாதியை காப்பாளராகக் கொண்டு வா.சா.ஆ.1ன்படி கிரையம் பெறப்பட்டுள்ளது என்பது 1ம் பிரதிவாதி தரப்பிலும் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளதாலும்,

2. வா.சா.ஆ.1 கிரைய ஆவணத்திலும் பொதுக்குடும்ப வருமானத்திலிருந்து பொதுக்குடும்பத்திற்காக தாவா 1வது இலக்கச் சொத்தானது வாங்கப்படுவதாக எந்தவிதமான சங்கதிகளும் இடம் பெறவில்லை என்பதாலும்,

3. வாதிகள் பெயரிலான வா.சா.ஆ.1ன்படியான கிரையத்தை ஏற்றுக் கொள்ளும் விதமாக வா.சா.ஆ.1ல் உள்ள 2 மற்றும் 3வது இலக்கச் சொத்துக்களை இந்த 1ம் பிரதிவாதியானவர், வாதிகளிடமிருந்து பி.வா.சா.ஆ.6ன்படி கிரையம் பெற்றுள்ள நிலையில், தாவா 1வது இலக்கச் சொத்தை மட்டும் பொதுக்குடும்பச் சொத்து என்ற வாதிடுவது முன்னுக்குப் பின் முரணாக உள்ளதாலும்,

4. தாவா 1வது இலக்கச் சொத்தைப் பொறுத்து பி.வா.சா.ஆ.3ன்படியான கிரையம் ஏற்பட்ட கால கட்டத்தில் இந்த வாதிகள் மேஜர்கள் என்பதாலும்,

5. தாவாச் 1வது இலக்கச் சொத்தானது வாதிகளின் பெயர்களில் இருப்பதை தெரிந்து கொண்டே, கிரைய காலத்தில் மேஜராக இருந்த வாதிகளிடம் இருந்து கிரையம் பெறாமல், தாவா 1வது இலக்கச் சொத்தில் எந்தவிதமான உரிமையும் இல்லாமல் 2ம் பிரதிவாதியிடம் இருந்து, 1ம் பிரதிவாதி கிரையம் பெற்றுள்ளதாலும்,

எனவே மேற்கண்ட காரணங்களினாலும், தாவா 1வது இலக்கச் சொத்தானது வாதிகளுக்குத் தனித்துப் பாத்தியப்பட்டது என்பது தெரிய வருவதாலும், மேலும் தாவா 1வது இலக்கச் சொத்தினைப் பொறுத்து ஏற்பட்ட பி.வா.சா.ஆ.3ன்படியான கிரைய காலத்தில் வாதிகள் மேஜராக இருந்துள்ள நிலையில், தாவா 1வது இலக்கச் சொத்தில் உரிமை இல்லாத 2ம் பிரதிவாதியிடமிருந்து, 1ம் பிரதிவாதியானவர் பி.வா.சா.ஆ.3ன்படி கிரையம் பெற்றுள்ளதாலும் மேற்படி கிரையம், தாவா 1வது இலக்கச் சொத்தின் உரிமையாளர்களான வாதிகளை கட்டுப்படுத்தாது என்பதாலும், வாதிகள் தாவா 1வது இலக்கச் சொத்தின் உரிமையாளர்கள் என்ற விளம்புகை பரிகாரம் வாதிகளுக்குக் கிடைக்கத்தக்கது என்றும், மேலும் தாவா 1வது இலக்கச் சொத்தைப் பொறுத்து 1ம் பிரதிவாதி பெற்றுள்ள கிரையம் வாதிகளை கட்டுப்படுத்தாது என்ற நிலையில், 1ம் பிரதிவாதி பெற்றுள்ள பி.வா.சா.ஆ.7 முதல் 21 வரையிலான பட்டா மாற்றும் கிஸ்தி ரசீதுகளும் தாவா 1வது இலக்கச் சொத்தைப் பொறுத்து ஏற்புடையதாக இல்லை என்ற நிலையில், Possession follows title என்ற அடிப்படையில் வாதிகள் கோரியுள்ள நிரந்தர உறுத்துக் கட்டளைப் பரிகாரமும் வாதிகளுக்குக் கிடைக்கத்தக்கது என்று மேற்கண்ட எழுவினாவிற்கு இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

26. **<u>எழுவினா 2 மற்றும் 5</u>**

தரப்பினர்களின் சூழ்நிலையையும், வழக்கின் தன்மையையும் கருத்திற்கொண்டு பார்க்கும் போது, மேற்கண்ட 2 மற்றும் 5ம் எழுவினாக்களுக்கு ஒரு சேர முடிவு காண்பதே சரியானதாக இருக்கும் என்பதால் மேற்கண்ட எழுவினாக்களுக்குப் பின்வருமாறு தீர்வு காணப்படுகிறது.

27. இருதரப்பு வாதுரை கேட்கப்பட்டது.

வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் வாதிடுகையில், தாவா 2 முதல் 4 இலக்கச் சொத்துக்கள் இந்த வாதிகளின் பூர்வீகச் சொத்துக்கள் என்றும், 2 முதல் 4 இலக்கச் சொத்துக்கள் பாகப்பிரிவினையின் போது 2ம் பிரதிவாதிக்குக் கிடைக்கப் பெற்றது என்றும், குடும்பத்திற்குள் பாகம் எதுவும் ஏற்படவில்லை என்பதால் மேற்படி 2 முதல் 4 இலக்கச் சொத்துக்களில் இந்த வாதிகளுக்கு மூன்றில் இரண்டு பாகம் பாத்தியப்பட்டுள்ளது என்றும், மேற்படி உண்மைகளை மறைத்து இந்த வாதிகளின் தகப்பனாரான 2ம் பிரதிவாதியானவர் தாவாச் சொத்துக்களின் முழு உரிமையாளர் போல் கடந்த 27.10.1999ம் தேதியில் 1ம்

பிரதிவாதிக்கு விற்பனை செய்து கொடுத்துள்ளார் என்றும், மேற்படி கிரய ஆவணம் பிரதிவாதிகள் தரப்பில் பி.வா.சா.ஆ.3 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், அவ்வாறு கிரயம் கொடுப்பதற்கு 2ம் பிரதிவாதிக்கு எந்தவிதமான உரிமையும் இல்லை என்றும், 2ம் பிரதிவாதியால் ஏற்டுபடுத்திக் கொடுக்கப்பட்டுள்ள பி.வா.சா.ஆ.3ன்படியான கிரயமானது இந்த வாதிகளை கட்டுப்படுத்தாது என்றும், எனவே தாவா 2 முதல் 4 இலக்கச் சொத்துக்களை நயமிடர் பார்த்து பிரித்து, மூன்றில் இரண்டு பாகத்தை இந்த வாதிகளுக்கு ஒதுக்குமாறு பிரதிவாதிகளுக்கு உத்தரவிட்டு தீர்ப்பும், தீர்ப்பாணையும் பிறப்பிக்க வேண்டும் என்றும் வாதிடப்பட்டது.

28. 1ம் பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் வாதிடுகையில், பி.வா.சா.ஆ.1, 2 ஆவணங்களின்படி தாவா 2 முதல் 4 இலக்கச் சொத்துக்களும், வேறு சில சொத்துக்களும் 2ம் பிரதிவாதிக்கு கிடைத்துள்ளது என்றும், வாதிகளும், 2 முதல் 4 பிரதிவாதிகளும் இந்து பொதுக்குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் என்றும், மேற்படி பொதுக்குடும்பத்தில் பாகம் எதுவும் நடைபெறவில்லை என்றும், 2ம் பிரதிவாதி உயிருடன் இருக்கும் வரை அவரே பொதுக்குடும்பத் தலைவராகவும், கர்த்தாவாகவும் இருந்து பொதுக்குடும்பச் சொத்துக்களை நிர்வாகம் செய்து வந்துள்ளார் என்றும், 2ம் பிரதிவாதியானவர் பொதுக்குடும்பத்தின் தகப்பனார் மற்றும் கர்த்தா என்ற முறையில் தாவா 1 மற்றும் 2வது இலக்கச் சொத்துக்களை கடந்த 27.10.1999ம் தேதியிட்ட பி.வா.சா.ஆ.3ன்படியான கிரைய ஆவணப்படி கிரயம் கொடுத்து, மேற்படி சொத்துக்களின் சுவாதீனத்தையும் ஒப்படைத்து விட்டார் என்றும், அதேபோல் தாவா 3வது இலக்கச் சொத்தினை கடந்த 14.02.2002ம் தேதியில் பி.வா.சா.ஆ.4 ஆவணத்தின்படி கிரையம் கொடுத்து அவற்றின் சுவாதீனத்தையும் ஒப்படைத்து விட்டார் என்றும், மேலும் மேற்படி கிரையச் சொத்துக்களில் உள்ள தென்னை மரங்களையும் இந்த 2ம் பிரதிவாதி பி.வா.சா.ஆ.5ன்படி கிரையம் கொடுத்துள்ளார் என்றும் வாதிடப்பட்டது.

29. 1ம் பிரதிவாதி தரப்பில் மேலும் வாதிடுகையில், மேற்படி கிரையச் சொத்துக்களுக்கு ஆரம்பத்தில் இந்த 1ம் பிரதிவாதியின் பெயரில் கூட்டுப்பட்டா ஏற்பட்டிருந்தது என்றும் மேற்படி கூட்டுப்பட்டா ஏற்பட்டதற்கான பட்டா மாறுதல் உத்தரவு பி.வா.சா.ஆ.7 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், பின்னர் அவை தனியாக உட்பிரிவு செய்யப்பட்டு, பட்டா எண்.2523ன்படி தனிப்பட்டா வழங்கப்பட்டது என்றும், பட்டா எண்.2523க்கான தனிப்பட்டா பி.வா.சா.ஆ.8 ஆகவும், பட்டா பாஸ் புத்தகம் அசல் பி.வா.சா.ஆ.9 ஆகவும், கிஸ்தி ரசீதுகள் பி.வா.சா.ஆ.10 முதல் 21 வரையிலும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், தாவா வழக்கிடைச் சொத்துக்களில் வாதிகளுக்கு எந்தவிதமான பங்கு உரிமையோ, பாகமோ கிடைக்கத்தக்கதல்ல என்றும், எனவே இந்த அசல் வழக்கானது இந்த பிரதிவாதியின் செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டும்

என்றும் வாதிடப்பட்டது.

30. இருதரப்பு வாதுரை மற்றும் சாட்சிய சான்றாவணங்களின் அடிப்படையில் தாவா 2 முதல் 4 இலக்கச் சொத்துக்களில் வாதிகள் கோரியுள்ள பாகம் வாதிகளுக்குக் கிடைக்கத்தக்கதா என்பதைப் பரிசீலனை செய்யும் போது, தாவா 2 முதல் 4 இலக்கச் சொத்துக்கள் 2ம் பிரதிவாதியின் பூர்வீகச் சொத்துக்கள் என்பது 1ம் பிரதிவாதி தரப்பில் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள நிலையில், பி.வா.சா.ஆ.1 மற்றும் பி.வா.சா.ஆ.2 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ள பாகப்பிரிவினை மற்றும் தான செட்டில்மெண்ட் ஆவணங்கள் இரு தரப்பிலும் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள ஆவணங்களாக உள்ளன. மேலும் வாதிகள் மற்றும் 2 முதல் 4 பிரதிவாதிகளின் குடும்பத்திற்குள் பாகம் எதுவும் நடைபெறவில்லை என்பதும் 1ம் பிரதிவாதி தரப்பிலும் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

31. மேலும் தாவா 2 முதல் 4 இலக்கச் சொத்துக்கள் பொதுக்குடும்பச் சொத்துக்கள் என்றும், அவற்றை பி.வா.சா.ஆ.3ன்படி கிரையம் செய்து கொடுப்பதற்கு இந்த வாதிகளின் தகப்பனாரான 2ம் பிரதிவாதிக்கு எந்தவிதமான தனிப்பட்ட உரிமையும் கிடையாது என்றும், மேற்படி பி.வா.சா.ஆ.3ன்படியான கிரயமும் இந்த வாதிகளின் பாகத்தைப் பொறுத்து செல்லத்தகுந்ததல்ல என்று வாதிகள் தரப்பில் வாதிடப்பட்டுள்ள நிலையில்,

32. 1ம் பிரதிவாதி தரப்பில் அதை மறுத்து, கூட்டுக்குடும்பத்தின் தலைவர் என்ற முறையிலும், கர்த்தா என்ற முறையிலும் தாவா 2 முதல் 4 இலக்கச் சொத்துக்களைக் கிரையம் செய்து கொடுப்பதற்கு 2ம் பிரதிவாதிக்கு முழு உரிமை உள்ளது என்று வாதிட்டு தாக்கல் செய்த முன் மாதிரி வழக்குகளான,

(2002)3 M.L.J. 43

IN THE HIGH COURT OF JUDICATURE AT MADRAS

Present: P.Shanmugam and K.Sampath, JJ.

A.S.No.371 of 1992 10th July, 2002

Minor.S.Vijayakumar (died) and others

... Appellants

v.

R.Subbarayan, S/o.C.M.Ramasamy Gounder, Trichy District.

Respondents

Hindu Law - Joint Family - Owning Properties - Alienation by the father for family necessity - Sons filing suit to declare the alienation by the father not binding on them - Alienations tainted with illegality and immorality - Suit dismissed - Appeal by the plaintiffs - Onus on them to prove that the alienation were for illegal and immoral purposes - Alienation by joint family manager void - able and not void - Onus on the plaintiffs to prove

that payment of consideration is false - Alienation made for family necessity only - Appeal dismissed

and

2013(5) CTC 49

IN THE HIGH COURT OF MADRAS

(Madurai Bench)

A.Selvam, J.

S.A.(MD) No.255 of 2010 & M.P.(MD) No.2 of 2010

22.7.2013

Mariammal & another

...Appellants

Vs.

Subbuthai & others

...Respondents

**Hindu Law** - Joint Family Property - Right of Father to alienate property - Father of Hindu Joint Family entitled to alienate Joint Family Property - Transfer made by father need not be legal necessity and will be binding on all members of Family - In instant case, sale deed executed by Father not tainted with illegality or immorality - Said sale deed to be presumed to be executed by Father as Joint Family Manager - Plaintiff being daughter, Coparcener of Joint family by birth - Plaintiff, held, bound by sale deed executed by Father - Suit filed by Plaintiff for claim half share in Joint Family property, dismissed - Second appeal allowed.

என்று மேற்கண்டவாறு முன் மாதிரி வழக்குகளில் வழிகாட்டுதல்கள் வழங்கப்பட்டுள்ள நிலையில், இந்த 2ம் பிரதிவாதியானவர் பி.வா.சா.ஆ.3ன்படியான கிரையத்தின் மூலமாக கிடைத்த பணத்தை குடும்ப நலனுக்கு எதிராக செலவு செய்தார் என்பதைப் பொறுத்து எந்தவிதமான வாதுரையும் வாதிகள் தரப்பில் மேற்கொள்ளப்படாத நிலையில், குடும்பத்தின் கர்த்தா என்ற முறையில் அவருக்குப் பாத்தியப்பட்ட சொத்துக்களை கிரயம் செய்து கொடுப்பதற்கு 2ம் பிரதிவாதிக்கு முழு உரிமையும் உள்ளது என்று பிரதிவாதிகள் தரப்பில் வாதிடப்பட்டுள்ளதாலும்,

33. மேலும் பிரதிவாதிகள் தரப்பில் 2ம் பிரதிவாதியானவர் பொதுக்குடும்பத்தின் தகப்பனார் மற்றும் கர்த்தா என்ற முறையில் தாவா 1 மற்றும் 2வது இலக்கச் சொத்துக்களை பி.வா.சா.ஆ.3ன்படியும், அதேபோல் தாவா 3வது இலக்கச் சொத்தினை பி.வா.சா.ஆ.4 ஆவணத்தின்படியும், மேற்படி கிரையச் சொத்துக்களில் உள்ள தென்னை மரங்களை

பி.வா.சா.ஆ.5ன்படியும் கிரையம் செய்து கொடுத்துள்ளார் என்றும், மேற்கண்டவாறு தாவா 1 முதல் 3 இலக்கச் சொத்துக்களை மட்டுமே இந்த 1ம் பிரதிவாதியானவர் கிரையம் பெற்று, பி.வா.சா.ஆ.7 முதல் 21 வரையிலான ஆவணங்களின்படி பட்டா மாற்றியும், கிஸ்தி செலுத்தியும் அனுபவம் செய்து வருகிறார் என்றும், 4வது இலக்கச் சொத்தானது இந்த 1ம் பிரதிவாதியால் கிரையம் பெறப்படவில்லை என்றும், தாவா 4வது இலக்கச் சொத்தானது இந்த 1ம் பிரதிவாதியால் கிரையம் பெறப்பட்டுள்ளது என்பதைப் பொறுத்து எந்தவிதமான ஆவணங்களையும் வாதிகள் தாக்கல் செய்யவில்லை என்றும், வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ள 2ம் வாதியும் தனது குறுக்கு விசாரணையின் போது,

**"என் தகப்பனார் நிறைய சொத்துக்களை கிரையம் கொடுத்திருக்கிறார். அவ்வாறு கிரையம் செய்துள்ளார், யாருக்கு கிரையம் கொடுத்துள்ளார் என்ற விவரங்கள் என் தகப்பனாரைக் கேட்க வேண்டும். அவ்வாறு கிரையம் பெற்றவர்களை இவ்வழக்கில் நாங்கள் கட்சி சேர்க்கவில்லை. பிராது 4ம் இலக்கச் சொத்தை பிச்சை என்பவருக்கு என் தகப்பனார் ஒத்திக் கொடுத்திருந்தார். கிரையம் செய்து கொடுத்தாரா என்பது தெரியாது. பிச்சை என்பவரை இந்த வழக்கில் நாங்கள் கட்சி சேர்க்கவில்லை"**

என்று மேற்கண்டவாறு தாவா 4வது இலக்கச் சொத்தானது பிச்சை என்பவரால் கிரையம் பெறப்பட்டுள்ளதை மறுக்கவில்லை என்றும், ஆனால் மேற்படி பிச்சை என்பவர் இந்த அசல் வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கப்படாத நிலையில் இந்த அசல் வழக்கானது அவசிய தரப்பினர்களை சேர்க்காத தோஷத்திற்கு உட்பட்டுள்ளதாக 1ம் பிரதிவாதி தரப்பில் வாதிடப்பட்டுள்ளது ஏற்கும்படி இருப்பதாலும்,

34. மேலும் தாவா 2 முதல் 4 இலக்கச் சொத்துக்கள் பொதுக்குடும்பச் சொத்துக்கள் என்று வாதிகள் தரப்பில் வாதிடப்பட்டுள்ள நிலையில், அவற்றில் குடும்ப உறுப்பினர்கள் அனைவருக்கும் பாகம் உள்ளது என்றும், வழக்கு தாக்கல் செய்த காலத்தில் இந்த வாதிகள், 2 முதல் 4 பிரதிவாதிகள் என்று மொத்தம் ஆறு பேர் குடும்ப உறுப்பினர்கள் இருந்திருந்த நிலையில், இந்த வாதிகள் ஆறில் இரண்டு பாகம் கோராமல், மூன்றில் இரண்டு பாகம் கோர முடியாது என்று 1ம் பிரதிவாதி தரப்பில் வாதிடப்பட்டது ஏற்கும்படி இருப்பதாலும், எனவே,

1. தாவா 2 முதல் 4 இலக்கச் சொத்துக்கள் பொதுக்குடும்பச் சொத்துக்கள் என்பதால் கூட்டுக்குடும்பத்தின் தலைவர் என்ற முறையிலும், கர்த்தா என்ற முறையிலும் அவற்றை கிரையம் செய்து கொடுப்பதற்கு 2ம் பிரதிவாதிக்கு முழு உரிமை உள்ளதாக முன் மாதிரி வழக்குகளில் வழிகாட்டுதல்கள் வழங்கப்பட்டுள்ளதாலும்,

2. தாவா 2 முதல் 4 இலக்கச் சொத்துக்கள் பொதுக்குடும்பச் சொத்துக்கள் என்பதால் வழக்கு தாக்கல் செய்த காலத்தில் இந்த வாதிகள், 2 முதல் 4 பிரதிவாதிகள் என்று மொத்தம் ஆறு பேர் குடும்ப உறுப்பினர்கள் இருந்திருந்த நிலையில், இந்த வாதிகள் ஆறில் இரண்டு பாகம் கோராமல், மூன்றில் இரண்டு பாகம் கோர முடியாது என்பதாலும்,

3. தாவா 4வது இலக்கச் சொத்தைக் கிரையம் பெற்றுள்ள பிச்சை என்பவர் இந்த அசல் வழக்கில் தரப்பினராக சேர்க்கப்படாததால் இந்த அசல் வழக்கானது அவசிய தரப்பினர்களை சேர்க்காத தோஷத்திற்கு உட்பட்டுள்ளதாலும்,

மேற்கண்ட காரணங்களினாலும் தாவா 2 முதல் 4 இலக்கச் சொத்துக்கள் பொதுக்குடும்பச் சொத்துக்கள் என்ற நிலையில், கூட்டுக்குடும்பத்தின் கர்த்தா என்ற முறையில், கூட்டுக்குடும்ப நலனுக்காக அவற்றை கிரையம் செய்து கொடுப்பதற்கு 2ம் பிரதிவாதிக்கு முழு உரிமை உள்ளதால், 2ம் பிரதிவாதி தாவா 2 முதல் 4 இலக்கச் சொத்துக்களைப் பொறுத்து ஏற்படுத்திக் கொடுத்துள்ள கிரைங்கள் சட்டப்படி செல்லத்தக்கது என்பதாலும், வாதிகள் கோரியுள்ள பாகப்பிரிவினைப் பரிகாரம் வாதிகளுக்குக் கிடைக்கத்தக்கதல்ல என்றும், இந்த அசல் வழக்கானது அவசிய தரப்பினர்களை சேர்க்காத தோஷத்திற்கு உட்பட்டுள்ளது என்றும் மேற்கண்ட எழுவினாக்களுக்கு இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

35. **<u>எழுவினா 6</u>**

1ம் பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் வாதிடுகையில், பாகப்பிரிவினை பரிகாரமும் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த அசல் வழக்கானது இதர பாக தாரர்களை சேர்க்காத தோஷத்திற்கு உட்பட்டுள்ளதாக வாதிடப்பட்டுள்ள நிலையில், அசல் வழக்கு நிலுவையில் இருக்கும் போதே 2ம் பிரதிவாதி இறந்து விட்டதால், அவரது வாரிசுகள் 3 மற்றும் 4ம் பிரதிவாதிகளாக சேர்க்கப்பட்டுவிட்ட நிலையில் இந்த அசல் வழக்கானது கூட்டு பாகஸ்தர்களை சேர்க்காத தோஷத்திற்கு உட்படவில்லை என்று மேற்கண்ட எழுவினாவிற்கு இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

36. **<u>எழுவினா 3</u>**

வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் வாதிடுகையில், வாதிகளின் பாகம் ஒப்படைக்கப்படும் தேதி வரை தாவா 2 முதல் 4 இலக்கச் சொத்துக்களிலிருந்து கிடைக்கக்கூடிய எதிர்கால நஷ்டியை உரிமையியல் விசாரணை முறைச் சட்டம் கட்டளை 20 விதி 2ன்படி பிரதிவாதியிடமிருந்து வசூலித்துக் கொள்ள வாதிகளுக்கு அனுமதி வழங்க வேண்டும் என்று வாதிடப்பட்டுள்ள நிலையில், தாவா 2 முதல் 4 வரையிலான சொத்துக்களைப் பொறுத்து 2ம் பிரதிவாதி செய்துள்ள கிரையமானது செல்லத்தக்கது என்றும்,

அவ்வாறு கிரையம் செய்து கொடுக்க 2ம் பிரதிவாதிக்கு முழு உரிமை உள்ளது என்றும் எழுவினா 2ன்படி தீர்வு காணப்பட்டுள்ள நிலையில், தாவா 2 முதல் 4 இலக்கச் சொத்துக்களைப் பொறுத்து வாதிகள் கோரியுள்ள எதிர்கால நஷ்டி வாதிகளுக்குக் கிடைக்கத்தக்கதல்ல என்று மேற்கண்ட எழுவினாவிற்கு இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

37. **எழுவினா 4**

வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் வாதிடுகையில், தாவா 1வது இலக்கச் சொத்தானது வாதிகளுக்கு கிரையப் பாத்தியப்பட்டது என்றும், தாவா 2 முதல் 4 இலக்கச் சொத்துக்கள் பொதுக்குடும்பச் சொத்துக்கள் என்றும், அவற்றை தனிப்பட்ட முறையில் கிரையம் கொடுப்பதற்கு 2ம் பிரதிவாதிக்கு எந்த உரிமையும் இல்லை என்றும், அவ்வாறு உரிமையில்லாத நபரிடமிருந்து 1ம் பிரதிவாதி கிரயம் பெற்றுள்ளதால் அவர் நல்லெண்ண கிரையதாரர் இல்லை என்றும் வாதிடப்பட்டுள்ள நிலையில்,

38. தாவா 1வது இலக்கச் சொத்தைப் பொறுத்து 1ம் பிரதிவாதி பெற்றுள்ள கிரையமானது உரிமையில்லாத நபரிடமிருந்து கிரையம் பெறப்பட்டுள்ளதாகவும், தாவா 2 முதல் 4 இலக்கச் சொத்துக்களைப் பொறுத்து கிரையம் செய்து கொடுப்பதற்கு 2ம் பிரதிவாதிக்கு முழு உரிமை உள்ளது என்றும் எழுவினா 1 மற்றும் 2ன்படி தீர்வு காணப்பட்டுள்ளதால், தாவா 1வது இலக்கச் சொத்தைப் பொறுத்து 1ம் பிரதிவாதியானவர் நல்லெண்ண கிரையதாரர் இல்லை என்றும், தாவா 2 மற்றும் 3வது இலக்கச் சொத்துக்களை மட்டும் 1ம் பிரதிவாதி கிரையம் பெற்றுள்ள நிலையில், தாவா 2 மற்றும் 3வது இலக்கச் சொத்துக்களைப் பொறுத்து இந்த 1ம் பிரதிவாதி நல்லெண்ண கிரயதாரர் என்றும் மேற்கண்ட எழுவினாவிற்கு இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

39. **எழுவினா 7**

இந்த வழக்கைப் பொறுத்த வரை வாதிகள் கோரியுள்ள பரிகாரங்கள் வாதிகளுக்கு பகுதியாக கிடைக்கத்தக்கது என்று தீர்வு காணப்பட்டுள்ள நிலையில், வேறு எந்த வேறு எந்த பரிகாரமும் வாதிகளுக்குக் கிடைக்கத்தக்கதல்ல என்றும், மேலும் வழக்கின் சூழ்நிலை கருதி செலவுத் தொகை இல்லை என்றும் இந்த எழுவினாவிற்கு தீர்வு காணப்படுகிறது.

முடிவில் வாதிகள் தாக்கல் செய்துள்ள இந்த அசல் வழக்கு பகுதியாக அனுமதிக்கப்பட்டு, வாதிகள் தாவா 1வது இலக்கச் சொத்தின் உரிமையாளர்கள் என்று விளம்புகை செய்தும், அதனைத் தொடர்ந்து 1வது இலக்கச் சொத்தில் வாதிகளின் அமைதியான அனுபவத்திற்கும், சுவாதீனத்திற்கும் பிரதிவாதிகளோ, அவர்களது முகவர்களோ மற்றும் வேலையாட்களோ எந்தவிதமான இடையூறும் செய்யக் கூடாது என்று பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்துக் கட்டளைப் பரிகாரம் பிறப்பித்தும், மேலும்

வாதிகள் கோரியுள்ள இதர பரிகாரங்களைப் பொறுத்து வழக்கை தள்ளுபடி செய்தும் தீர்ப்பளிக்கப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இந்த தீர்ப்புரை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு 2017ம் ஆண்டு நவம்பர் திங்கள் 10ம் நாள் அவையறிய பகரப்பட்டது.

(ஒப்பம்) சுரேஷ்
**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**மேலூர்.**

**<u>வாதிகள் தரப்பு சாட்சி</u>**
டி.கௌரிசங்கர், த/பெ.தனிக்கொடி

**<u>வாதிகள் தரப்பு சான்றாவணங்கள்:</u>**

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.1 | 08.07.1981 | கிரைய ஆவணம் அசல் |
| வா.சா.ஆ.2 | | பட்டா எண்.250க்கான கணிணி பட்டா அசல் |
| வா.சா.ஆ.3 | 31.07.2002 | 1411ம் பசலிக்கான கிஸ்தி ரசீது அசல் |
| வா.சா.ஆ.4 | 12.02.2009 | வழக்கறிஞர் அறிவிப்பின் அலுவலக நகல் அஞ்சல் ரசீதுடன் |
| வா.சா.ஆ.5 | | அஞ்சல் ஒப்புகை அட்டை அசல் |
| வா.சா.ஆ.6 | 19.02.2009 | பதில் அறிவிப்பு |

**<u>பிரதிவாதிகள் தரப்பு சாட்சி</u>**
முருகேசன், த/பெ.சுந்தரமகாலிங்கம்

**<u>பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணங்கள்:</u>**

| | | |
|---|---|---|
| பி.வா.சா.ஆ.1 | 13.08.1956 | பாகப்பிரிவினை பத்திரம் சான்றிட்ட நகல் |
| பி.வா.சா.ஆ.2 | 07.04.1956 | செட்டில்மெண்ட் பத்திரம் சான்றிட்ட நகல |
| பி.வா.சா.ஆ.3 | 27.10.1999 | கிரைய ஆவணம் அசல் |
| பி.வா.சா.ஆ.4 | 14.02.2002 | கிரைய ஆவணம் அசல் |
| பி.வா.சா.ஆ.5 | 14.02.2002 | கிரைய ஆவணம் அசல் |
| பி.வா.சா.ஆ.6 | 10.02.2003 | கிரைய ஆவணம் அசல் |
| பி.வா.சா.ஆ.7 | 23.01.2004 | பட்டா மாறுதல் உத்தரவு அசல் |
| பி.வா.சா.ஆ.8 | 18.03.2005 | பட்டா எண்.2523க்கான கணிணி பட்டா அசல் |
| பி.வா.சா.ஆ.9 | | முருகேசன் பெயரிலான பட்டா பாஸ் புத்தகம் அசல் |
| பி.வா.சா.ஆ.10 | 15.03.2000 | 1409ம் பசலிக்கான கிஸ்தி ரசீது அசல் |

| | | |
|---|---|---|
| பி.வா.சா.ஆ.11 | 23.06.2001 | 1410ம் பசலிக்கான கிஸ்தி ரசீது அசல் |
| பி.வா.சா.ஆ.12 | 16.03.2002 | 1411ம் பசலிக்கான கிஸ்தி ரசீது அசல் |
| பி.வா.சா.ஆ.13 | 08.03.2005 | 1414ம் பசலிக்கான கிஸ்தி ரசீது அசல் |
| பி.வா.சா.ஆ.14 | 08.03.2005 | 1414ம் பசலிக்கான கிஸ்தி ரசீது அசல் |
| பி.வா.சா.ஆ.15 | 09.03.2006 | 1415ம் பசலிக்கான கிஸ்தி ரசீது அசல் |
| பி.வா.சா.ஆ.16 | 09.03.2006 | 1415ம் பசலிக்கான கிஸ்தி ரசீது அசல் |
| பி.வா.சா.ஆ.17 | 14.03.2008 | 1417ம் பசலிக்கான கிஸ்தி ரசீது அசல் |
| பி.வா.சா.ஆ.18 | 24.03.2009 | 1418ம் பசலிக்கான கிஸ்தி ரசீது அசல் |
| பி.வா.சா.ஆ.19 | 04.05.2011 | 1420ம் பசலிக்கான கிஸ்தி ரசீது அசல் |
| பி.வா.சா.ஆ.20 | 07.03.2014 | 1423ம் பசலிக்கான கிஸ்தி ரசீது அசல் |
| பி.வா.சா.ஆ.21 | 19.02.2016 | 1425ம் பசலிக்கான கிஸ்தி ரசீது அசல் |

(ஒப்பம்) சுரேஷ்
**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**மேலூர்.**

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
மேலூர்
அசல் வழக்கு எண். 238/2009
சீரான / வரைவு தீர்ப்புரை
நாள் : 10.11.2017